உ

அச்சுமுறி விநாயகர் துணை



காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம்,
அச்சிறுபாக்கம்.

# அருள்மிகு இளங்கிளியம்மன் உடனுறை ஸ்ரீ ஆட்சீஸ்வரர் சுவாமி திருக்கோயில்

## திருக்கோயில் பற்றிய சிறுகுறிப்புகள்
## அகஸ்தியநாடி பரிகாரஸ்தலம்

(திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம்)







# திருக்கோயில் பற்றிய சிறுகுறிப்புகள் அகஸ்தியநாடி பரிகாரஸ்தலம்

## அருள்மிகு ஆட்சீஸ்வரர் சுவாமி திருக்கோயில்

### அச்சிறுபாக்கம்

உலக உயிரினங்கள் இன்புற்று அமைதியாக வாழ வழி வகுப்பவை திருக்கோயில்கள்.

அவ்வாறு சிறப்புற அமைந்த கோயில்களை இறைவன் இன்னருள் பெற்ற பெரும் முனிவர்களும், தவஞானியரும் நேரில் வந்து பாடியுள்ளனர். அத்தகைய உயர்ந்த சிறப்பைப் பெற்ற திருக்கோயில்களில் தனிச்சிறப்புப் பெற்றது. ஸ்ரீ ஆட்சீஸ்வரர் சுவாமி திருக்கோயில் தொண்டை நன்நாட்டின் முப்பத்திரண்டு சிவமுக்தி ஸ்தலங்களில் 29 – வது ஸ்தலமும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்) ரா – ல் பாடல் பெற்ற ஸ்தலம், கண்ணுவ, கௌதமர், அகத்தியர், உமாபதி சிவாச்சாரியார், அருணகிரிநாதர் போன்ற மாமுனிவர்கள் வழிபட்ட திருக்கோயிலாகும்.

## திருக்கோயில் அமைவிடம்

சென்னையில் இருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மேல்மருவத்தூர் அருகாமையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

அச்சிறுபாக்கம் ஆட்சீஸ்வரர் சுவாமி திருக்கோயில் பற்றிய மூன்று விதமான செய்திகள்

tnhrce.org

**ஒன்றாவது:**

முன்பு ஒரு காலத்தில் தாரகன், வித்யுன்மாலி, கமலாட்சன் ஆகிய மூன்று அசுரர்களும் பிரம்மதேவனை நோக்கி கடுந்தவம் புரிந்தனர். அவர்கள் தவத்துக்கு இரங்கிய பிரம்மதேவர் அசுரர்கள் முன்தோன்றி, உங்களுக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார், அதற்கு அவர்கள் முறையே தங்களுக்கு பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் ஆனதும், பறக்கும் வல்லமை பொருந்தியதுமான மூன்று கோட்டைகள் வேண்டும் என்று வேண்டினர். அவரும் அவ்வாறே வரம் அளித்தார். அவர்கள் அக்கோட்டைகளுடன் வானத்தில் பறந்து சென்று தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் தாங்கவொண்ணா இடுக்கண் புரிந்து வந்தனர்.

தேவர்கள் துன்பம் தாங்காது சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் மூன்று அசுரர்களை ஒடுக்க வானேழு உலகினை மேல்தட்டாகவும், கீழே உள்ள உலகினை அடித்தட்டாகவும், சூரியன் சந்திரனை சக்கரங்களாகவும், நான்கு வேதங்களை குதிரைகளாகவும் உள்ள தேரில் மேருமலையை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டு பிரம்மா தேரை ஓட்டி முப்பராதிகளை வெல்லச் செல்லும்போது எல்லோரையும் அழைத்து துணைகொண்ட சிவன் அசுரர்களை அழிக்க புறப்பட்டார். தன்னை அழைக்காததால் கோபம் கொண்ட விநாயகப் பெருமான் அத்தேரின் அச்சினை இரண்டாக முறித்து விட்டார்.

சிவபெருமான் தேவாம்சம் பொருந்திய தேரில் இருந்து இறங்கி ஸ்ரீவிநாயகப் பெருமானை வணங்கி, விநாயக பெருமானுக்கு முக்கண் உடைய தேங்காய் பலியிட்டு (செதூர் தேங்காய் உடைத்து) மீண்டும் அத்தேரில் சென்று

முப்பராதிகளை அழிக்க திருவதிகை என்ற ஸ்தலத்திற்கு செல்கிறார். தேர் அச்சு + இற்ற காரணத்தினால் அச்சிறுபாக்கம் என இவ்வூர் பெயர் பெற காரணமாகும். அருணகிரிநாதர் பாடல் பெற்ற தலம்.

tnhrce.org

**அருணகிரிநாதர் அருளிய அச்சுமுறி வினாயகர் துதி**

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்திய லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

**அச்சது பொடி செய்த**

இவ்வாலயத்தில் அச்சுமுறி விநாயகரை வழிபட்டால் சகல கஷ்டங்களும், சகலவித தோஷங்களும், தொழில் தொடங்குவதற்கு தடங்களும், படிப்பிற்கும் 11, 54, 108, 1008 சதுர் தேங்காய் உடைத்து சங்கடங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**இரண்டாவது:**

முன்பு ஒரு சமயம் பாண்டிய மன்னன் ஒருவன் பெரும் படையோடு வடநாடு நோக்கிப் படையெடுத்துச் சென்றான், இவ்வூர் வழியாக அவன் சென்றபோது காட்டு முல்லைக் கொடிகள் சூழ்ந்த கானகம் ஒன்றைக் கண்டான், காட்டில் பொன்னிற உடும்பு ஒன்று ஓடுவதைப் பார்த்தான்.

அவன் அதனைத் துரத்திச் செல்கையில் சரக்கொன்றை மரத்தின் அடியிலிருந்த பொந்து ஒன்றில் அது ஓடி மறைந்தது, ஏவலர்களை அழைத்து அம்மரத்தை வெட்டும்படி ஆணையிட்டான் அரசன், ஏவலர்கள் கோடாரியால் அம்மரத்தின் அடிபாகத்தை வெட்டக் குருதி வெளிப்பட்டது. மண்ணை அகழ்ந்து பார்க்கையில் தானாய்த் தோன்றிய சிவலிங்கம் ஒன்றைக் கண்டார்கள் அன்று முழுவதும் சிவனுக்கு ஏற்பட்ட தழும்பை எண்ணி வருந்தியபடியே உறக்கத்தில் ஆழ்ந்தான் மன்னன்.

tmhrce.org

அவன் கனவில் எம்பிரான் தோன்றித் தமக்கு ஒரு கோவில் கட்டும்படி பணித்தார். மன்னனும் அந்த ஆணையின்படி திரிநேத்திரதாரி என்ற முனிவரிடம் வேறு எங்கும் இல்லாத விதத்தில் கோயில் ஒன்றைக் கட்டும்படி கூறி பொன், பொருள் கொடுத்துவிட்டு வடநாடு சென்றார்.

முனிவர் இத்திருக்கோயிலை இரண்டு கருவறைக் கொண்டு அமைத்தார். இராஜகோபுரத்திற்கு நேராக ஒரு கருவறையும், கொடிமரம், நந்தி, பலிபீடத்திற்கு நேராக ஒரு கருவறையும் அமைத்தார். பாண்டிய மன்னன் வடநாடு சென்று திரும்பி வரும்போது ஆலயத்தைக் கண்டு வியப்புற்றான். முனிவரை அழைத்து ஆலயத்தை இவ்வாறு அமைத்ததற்கு என்ன காரணம் என்று வினவினான். எமை ஆட்கொண்டவர் எம்மையாட்சீஸ்வரர் என்றும், உமை ஆட்கொண்டவர் உமையாட்சீஸ்வரர். உமை ஆட்கொண்டவர் சன்னதிக்கு நேராக இராஜகோபுரம் (பிரதான வாயிலும்) எம்மை ஆட்கொண்டவர் பிரதான சன்னதி நந்தி, பலிபீடம், கொடிமரம் அமையப் பெற்று உள்ளது, என்று இரு கருவறை அமைத்ததின் காரணத்தை பாண்டிய மன்னனுக்கு எடுத்துரைத்தார். முனிவர் கடுந்தவம் இருந்து வந்தார். அவர் தவத்தை மெச்சிய ஆட்சீஸ்வரர் அவர்முன் தோன்றி யாது வரம் வேண்டும்? எனக்கேட்க, முன்னர் திரிபுவனம் எரித்தபோது தேரினின்று இறங்கியக் காட்சியைக் காண்பிக்கும்படி திரிநேத்திரதாரி இறைவனிடம் வேண்டினார். அவ்வாறே எம்பிரானும் அவருக்குக் காட்சி அளித்தார்.

அன்று முதல் ஆண்டுக்கு ஒருமுறை சித்திரைப் பெருந் திருவிழாவில் ஏழாம்நாள் திருத்தேர் உற்சவத்தில் அந்திசாயும் நேரத்தில் திருக்கோயில் உள்பிரகாரத்தில் கொன்றை மரத்தடியில் திருநேத்திரதாரி முனிவருக்கு தேரில் இருந்து இறங்கி இறைவன் இன்றளவும் காட்சியளித்து வருகிறார்.

அதுவே கொன்றையடி சேவை என இன்றளவும் மக்களால் போற்றப்படுகிறது.

<u>மூன்றாவது:</u>

பாண்டிய நாட்டு அரசன் ஒருவன் தன் நாட்டிலுள்ள கோயில் ஒன்றில் திருப்பணிக்காகக் கங்கை ஆற்றின் மணல் மூட்டைகளை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு வந்தான். அப்போது அந்த வண்டிகள் இந்த இடத்தின் அருகில் வந்து மேலே செல்லாமல் நின்றுவிட்டன. அவற்றை ஊக்கிச் செலுத்த முயன்றனர். அதனால் வண்டிகளின் அச்சுகள் முறிந்துவிட்டன.

அந்த செய்தி, அந்த மன்னனுக்கு வான்ஒலி வழியாகச் கேட்கவே, அவனே நேரில் வந்து இந்தக் கோயிலின் திருப்பணிகளைச் செய்வித்தான். அந்த வண்டிகள் வந்து நின்ற இடமே. வண்டிக்குப்பம் என்று இன்றும் பெயர் வழங்கப்பெறுகிறது.

tnhrce.org

இறைவன் சுயம்பு உருவானவர், இவர் பாக்கபுரேசர், ஆட்சீசர், ஆட்சி கொண்டார், ஸ்திரவாசபுரீஸ்வரர், முல்லைக் கானமுடையார் என்னும் திருப்பெயர்களைக் கொண்டவர் என்பதைக் கல்வெட்டுக் குறிப்புகளாலும் ஏனைய குறிப்புகளாலும் அறிகிறோம்.

அம்பிகைக்கு சுந்தரநாயகி, பாலாம்பிகை, இளங்கிளியம்மை, அதிசுந்தர மின்னாளம்மை என்ற திருப்பெயர்கள் உண்டு.

<u>இத்திருக்கோயிலின் திருவிழாக்கள்:—</u>

1. சித்திரை — பிரம்மோற்சவம் (சித்திரை நட்சத்திரம்), அப்பர் சுவாமி உற்சவம்.
2. வைகாசி — திருஞானசம்பந்தர் உற்சவம், வைகாசி விசாகம்.
3. ஆனி — ஆனி திருமஞ்சனம்.
4. ஆடி — ஆடிப்பூரம் இளங்கிளியம்மன் வளைகாப்பு, ஆடி கிருத்திகை காவடி உற்சவம்.

5. ஆவணி – விநாயகர் சதுர்த்தி.

6. புரட்டாசி – நவராத்திரி, ஸ்ரீனிவாசப் பெருமாளுக்கு நான்கு சனிக்கிழமை அபிஷேகம்.

7. ஐப்பசி – அன்னாபிஷேகம், கந்தர் சஷ்டி விழா.

8. கார்த்திகை – கார்த்திகை தீபம் பஞ்சமூர்த்தி வீதிஉலா, டவது சோமவாரம் ருத்ராபிஷேகம்.

9. மார்கழி, – ஆருத்ரா தரிசனம், மாணிக்கவாசகர் உற்சவம்.

10. தை – தைப்பூச தெப்பல், தைக்கிருத்திகை உற்சவம்.

11. மாசி – மஹா சிவராத்திரி.

12. பங்குனி – உத்திரம் திருக்கல்யாணம்.

tnhrce.org

காணும் பொங்கல், பிரம்மோற்சவம் பதினோராம் நாள் ஆகிய இரண்டு விழா நாட்களிலும் ஆட்சீஸ்வரர் தென்பாலுள்ள பெரும்பேர் கண்டிகைக்கு சென்று வருதல் உண்டு.

## திருக்கோயில் நிர்வாகம்

செயல் அலுவலர் மற்றும் தக்கார் நிர்வகித்து வருகின்றனர். திருக்கோயிலுக்கு 60 ஏக்கர் 28 சென்ட் நஞ்சையும், 34 ஏக்கர் 53 சென்ட் புஞ்சையும், 13 கட்டிடங்களும் 27 மனைகளும் உள்ளன. ஞாயிற்றுக்கிழமை சந்தை உள்ளது, திருக்கோயில் வருமானம் சுமார் 10 லட்சமாகும்.

## அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோயில், அச்சிறுபாக்கம்
## திருஞானசம்பந்தர் பாடல்கள்
### பண் : குறிஞ்சி

முதல் பாடல்:

பொன்றிரண் டன்ன புரிசடை புரளப்
பொருகடற் பவளமொ டழனிறம் புரையக்
குன்றிரண் டனன் தோளுடை யகலங்
குலாயவெண் ணூலொடு கொழும்பொடி யணிவர்
மின்றிரண் டன்ன நுண்ணிடை யரிவை
மெல்லிய லாளையோர் பாகமாப் பேணி
அன்றிரண் டுருவ மாயவெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சிகொண்ட டாரே!

## பதினோராம் பாடல்

மைச்செறி குவளை தவளைவாய் நிறைய
மதுமலர்ப் பொய்கையிற் புதுமலர் கிழியப்
பச்சிற வெறிவயல் வெறிகமழ் காழிப்
பதியவர் அதிபதி கவுணியர் பெருமான்
கைச்சிறு மறியவன் கழலாலாற் பேணாக்
கருத்துடை ஞானசம் பந்தன தமிழ்கொண்டு
அச்சிறு பாக்கத் தடிகளை ஏத்தும்
அன்புடை அடியவர் அருவினை இலரே!

tnhrce.org

## திருநாவுக்கரசு சுவாமிகள்

எல்சில் இளமர் ஏம நல்லூர்
இலம்பையங் கோட்டு ரிறையான் சேரி
அச்சிறுபாக்கம் அளப்பூர் அம்பர்
ஆவடுதண்டுறை அழுந்தூர் ஆறை
கச்சினம் கற்குடி கச்சூராலக்
கோயில் கரவீரம் காட்டுப்பள்ளி
கச்சிப் பலதளியும் ஏகம்பத்தும்
கயிலாய நாதனையே காணலாமே

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

ஆரூர்தில்லையம்பலம் வல்லம் நல்லம்
வடகச்சியும் அச்சிறுபாக்கம் நல்ல
கூடரூர் குடவாயில் குடந்தை வெண்ணி
கடல்சூழ் கழிப்பாலை தென்கோடி பீடார்
நீரூர் வயல் நின்றியூர் குன்றியூரும்
குருகாவையூர் நாரையூர் நீடுகானப்
பேரூர் நன்னீள்வயல் நெய்த்தானமும்
பிதற்றாய் பிறைசூடிதன் பேரிடமே.

குறிப்பு :

திருமணத்தடை, அரசியல், அரசு பதவி உயர்வு, குழந்தை பாக்கியம், தொழில்முன்னேற்றம் பெற ஆட்சிபுரிஸ்வரரை வணங்கினால் சகலவிதமான அருள் கிடைக்கும்.

## பூஜை நேரம்

| | | |
|---|---|---|
| காலசந்தி | : | 8.30 மணிக்கு பகல் |
| உச்சிகாலம் | : | 11.30 மணிக்கு பகல் |
| சாயரட்சை | : | 6.30 மணிக்கு மாலை |
| அர்த்தஜாமம் | : | 8.30 மணிக்கு இரவு |

tnhrce.org

## பிற விசேஷங்கள்

ஆண்டுதோறும் – குருப்பெயர்ச்சி, இரண்டரை ஆண்டுக்கு ஒருமுறை சனிப்பெயர்ச்சி, மாதம் இருமுறை பிரதோஷ வழிபாடும், அமாவாசை பௌர்ணமி சங்கடஹரசதுர்த்தி, தேய்பிறை அஷ்டமி பைரவருக்கு பூஜை மற்றும் சிறப்பு பரிகார ஹோமங்கள்.

சித்திரைப் பெருவிழாவில் 11 – ம் நாள் அகஸ்தியருக்கு காட்சிக் கொடுத்து கிரிவலம் நடைபெறுகிறது.

## தொடர்புக்கு

இ. வடிவேல்துரை,
செயல் அலுவலர்
97863 – 60054

இரா. சங்கர் சிவாச்சாரியார்
98423 – 09534
e-mail : eoaatcheswarar@gmail.com



ஓம் நமசிவாய




தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

திருச்சிற்றம்பலம்.

Shivalaya